# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

மனு எண் : 0289 / 2015 / ந

ஆணை எண் :098 / 2017

நாள் :05/05/2017

திரு.வி.கணபதி பால சுப்பிரமணியன்,
3,கிழக்கு குளக்கரைத் தெரு,
மேலகடையநல்லூர். — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
மற்றும் பிறர். — எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 28.10.2015 நாளிட்ட முறையீட்டு மனு 02.11.2015 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்:0289/15 ஆக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தான் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை உட்பட பல்வேறு அரசுத் துறைகளிலும் கடையநல்லூர் நகராட்சியிலும் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பணிகள் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். கடையநல்லூர் நகராட்சியில் டெண்டர் விடுவதிலும், பணிகள் மேற்கொள்வதிலும் பல்வேறு முறைகேடுகள் மற்றும் விதிமீறல்கள் நடைபெறுவதாகவும் நகராட்சிக்குப் பல கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்து கீழ்க்குறிப்பிட்டவாறான குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளார்:-

i) ஒளிவு மறைவற்ற டெண்டர் சட்டம் உள்ளிட்ட எந்த சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

ii) சில பணிகளுக்கான டெண்டரில் குறைந்த விலைப் புள்ளிகள் வரப்பெற்றிருந்தும், முன்னாள் நகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களக்கு தரகு கிடைக்கவேண்டுமென்பதற்காக அவற்றை ரத்து செய்துவிட்டு அதே பணிகளை மீண்டும் அதிக தொகைக்கு தங்களுக்கு வேண்டிய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கியது.

அவ்வாறான சில பணிகள் தொடர்பான விவரங்களை முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மனுதாரரது 20.11.2015 நாளிட்ட மனுவில் பணிகளுக்கான டெண்டர் அறிவிப்பு முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை எனவும் புகார் தெரிவித்துள்ளார். இம்மனுதாரரது புகார் பொருட்பாடுகள் குறித்து விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடையநல்லூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் 06.11.2015 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி கடையநல்லூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:5695/2015/இ1 நாள்:03.12.2015 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கடையநல்லூர் நகராட்சிப் பகுதி, வார்டு எண் 23,TDTA, வேதக்கோவில் கிழமேல் தெருவில் மழைநீர் மற்றும் சிமெண்ட் பேவர்கல் ரூ5/- லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மற்றும் அதே வார்டு கிருஷ்ணன் கோவில் மேலத்தெரு 2,3,4 மற்றும் 5-வது தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் பேவர்கல் ரூ8/-லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் நகர்மன்றத் தீர்மான எண் 215 நாள்:25.06.2014 ன் படி அனுமதி வழங்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கண்ட இரண்டு பணிகளுக்கும் 13.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25.08.2014 அன்று நகர்மன்ற கூட்ட முடிவுக்கு வைக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளின் முடிவுகள் 23 வது வார்டு உறுப்பினர் கோரிக்கையினை ஏற்று, பொருள் கைவிடப்படுவதாக நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்மன்றத் தீர்மான எண் 383 நாள் 15.10.2014 ன்படி, 23வது வார்டிலுள்ள கிருஷ்ணன் கோவில் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் பேவர்பிளாக் ரூ18/- லட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணிக்கு

தொழில் நுட்ப அனுமதி திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் வழங்கப்பட்டு, 18.12.2014ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.எஸ்.சேக் உதுமான் ஹக்கீம் எனும் ஒப்பந்ததாருக்கு நகர்மன்ற ஒப்புதலின்படி (தீர்மான எண்:508 நாள்:31.12.2014) பணிகள் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகையும் வழங்கப்பட்டுள்ளதெனவும் இதில் முறைகேடுகள் எதுவுமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட நகர்மன்ற தீர்மான நகல்கள் மற்றும் தொடர்புடைய ஆவண நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முறையீட்டு மனுதாரரது 25.05.2016 நாளிட்டு வரப்பெற்ற கடிதத்தில், (27.05.2016ல் இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது) கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் புகார் செய்ததற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக வீண்பழி சுமத்தி தனது ஒப்பந்த உரிமத்தினை இரத்து செய்து, ஒப்பந்ததாரர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலின் கீழ் கொண்டு வந்துள்ளதாக தனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த நகராட்சியின் 14.12.2015 நாளிட்ட அறிவிப்பு பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி அறிவிப்பில் கீழ்க்கண்டுள்ள வாசகங்கள் இடம் பெற்றுள்ளன:-

> "...............திரு.K.A.செய்யது அக்பர் மற்றும் திரு.V.கணபதி பாலசுப்பிரமணியன் ஆகிய தாங்கள் இந்நகராட்சியில் ஒப்பந்தகாரர்களாக பணிபுரிந்துகொண்டு ஒப்பந்த விதிகளை மீறி செயல்பட்ட காரணத்தினால் 2015-2016ம் ஆண்டிற்கான ஒப்பந்த உரிமத்தினை ரத்து செய்து நிரந்தரமாக ஒப்பந்தக்காரர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து கருப்பு பட்டியலின் கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருந்ததால் தங்களுக்கு 08.09.2015 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.........."

மேற்கண்ட அறிவிப்பின்படி 08.09.2015 க்கு முன்னதாகவே முறையீட்டு மனுதாரர் மீதான நடவடிக்கைகள் வேறு சில காரணங்களுக்காக நகராட்சியால்

எடுக்கப்பட்டுள்ளதென்பதும் அவரது 25.05.2016 புகார் மனுவில் குறிப்பிட்டது போல் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு தாக்கல் செய்ததற்குப்பின் (02.11.2015) எடுக்கப்பட்டதல்ல என்பதும் இம்முறைமன்ற நடுவ பரிசீலனையில் ஆவணங்களின்படி தெளிவாகியுள்ளது. இருப்பினும், மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் 05.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு அழைப்பாணை (அ.ம.எண்:0289/2015/ந நாள்:09.09.2016) அனுப்பப்பட்டது. மேலும், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ சட்டப் பிரிவு 6 (4) மற்றும் 8 ன் கீழ் உள்ள அதிகாரங்களின் படி உரிய விசாரணை/ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கை சமர்ப்பித்திட திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டுள்ள விவரங்களும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. இது மட்டுமன்றி மனுதாரரது 29.08.2016 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கான பதிலிலும் (ஓ.ம.எண்:0901/16/த.அ.உ. நாள்:21.09.2016) மேற்படி விவரங்களடங்கிய தகவல் அளிக்கப்பட்டுள்ள விவரங்களும் தெரிவிக்கப்பட்டன.

05.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது புகார்களை மீள வலியுறுத்தியதுடன், முறை மன்ற நடுவ ஆணைகளின்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரை தொடர்புகொண்டு உரிய விளக்கங்கள் அளிப்பதாக தெரிவித்து தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். மேலும், ஏற்கெனவே சாலை அமைத்ததில் ரூ6.5 கோடி முறைகேடு என லஞ்ச ஒழிப்புத் துறையினால் பதிவு செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளதெனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த விவரங்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, திருநெல்வேலி காவல் துணை கண்காணிப்பாளரிடம் இம்முறைமன்ற நடுவத்தால் கோரப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 07.10.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, விசாரணையை துரிதப்படுத்தி கோரப்பட்ட அறிக்கையினை உடன் சமர்ப்பித்திட திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு வலியுறுத்தி ஆணையிடப்பட்டது. இதனிடையே திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது 06.09.2016 அறிக்கை 06.10.2016 அன்று வரப்பெற்றது. அதில் கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்ற விவரம் ஆய்வின்

வாயிலாகவும், கோப்புகள் வாயிலாகவும் அறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய நகராட்சி ஆவணங்களின் நகல்களும் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரரது 10.11.2016 நாளிட்ட மனுவில் திருநெல்வேலி மண்டல, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தனக்கு விளக்கங்கள் அளிக்க நேரம் ஒதுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவ ஆணைகளின்படி மனுதாரரிடம் விசாரித்து, விளக்கங்கள் பெற்று உரிய பதில்கள் மனுதாருக்கு வழங்கப்பட்ட விவரங்களடங்கிய அறிக்கையினை அனுப்பிவைத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் 15.11.2016 அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

மனுதாரரது 27.12.2016 நாளிட்ட பிறிதொரு மனுவில், 20.12.2016 அழைக்கப்பட்ட தன்னிடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளர் ஒருவர் விசாரித்ததாகவும், தனது குற்றச்சாட்டிற்கு போதிய முக்கியத்துவம் தராமல், புகாரை தட்டிக்கழிக்கும் வகையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் செயல்படுகிறதோ என்ற சந்தேகம் தனக்கு எழுவதாக குறிப்பிடப்பட்டது. இதனடிப்படையில் இம்முறைமன்ற நடுவ அம.எண்:0289/15/ந நாள்:02.01.2017 ல் கீழ்க்கண்டவாறான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:-

"………சட்டமுறையிலான அதிகாரத்தின்படி பொறுப்பாக்கப்பட்ட பணியினை இம்முறைமன்ற நடுவத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு, பொறுப்பினை ஏற்று முன் நின்று முடித்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டுமெனவும், சார்நிலை அலுவலர்களுக்கு அவ்வதிகாரத்தினை பொறுப்பாக்கப்பட்ட அலுவலர் மறு நிர்ணயம் செய்திட வழிவகை இல்லை எனத் தெரிவித்தும் ஆணையிடப்படுகிறது. அவ்வாறு முரண்பாடான செயல்பாடுகள் இருப்பின் அச்செயல் கண்டனத்திற்கும், நடவடிக்கைக்கும் உரியதாகவே கருதப்படும். எனவே, இம்முறைமன்ற நடுவத்தால் பொறுப்பாக்கப்பட்டவாறு 20.01.2017க்குள் மனுதாரரிடம் விசாரித்து (நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்) உரிய விளக்கங்களுடனான அறிக்கையை அனுப்பிவைத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது……." என்று அவ்வாணையில் உத்தரவிடப்பட்டிருந்தது.

மேற்கண்ட ஆணைகளுக்கிணங்க திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கை ந.க.எண்.3064/2016/அ3 நாள் 01.02.2017வரப்பெற்றது. அவ்வறிக்கையில் மனுதாரர் 20.12.2016 அன்று அளித்துள்ள வாக்குமூலத்தைத் தொடர்ந்து, 04.01.2017 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரை சந்தித்ததாகவும், அவரிடம் நேரடி விசாரணை நடத்தப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் அளித்துள்ள விளக்கங்களின் மீது நகராட்சி

ஆணையரது கடிதம் எண் 5995/2016/இ-1, நாள்:28.12.2016ல் பதில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் குறிப்பிட்டு தனது குறிப்பான அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

"திரு.அயூப்கான், கடையநல்லூர் நகராட்சி ஆணையரால் 13.07.2015 அன்று வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில், பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் மொத்தம் 50 பணிகள் உள்ளன. இவற்றின் மொத்த மதிப்புத் தொகை ரூ.2,02,62,000/-ஆக இருந்தபோதிலும் இவற்றில் ஒவ்வொரு பணியும் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டிற்கு குறைவாக உள்ளதால், நகராட்சி ஆணையரால் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலரிலும் வெளியிடப்படவில்லை. ஆனால், அலுவலக பதிவறை எழுத்தர் மூலமாக உள்ளூர் தபால் பதிவேட்டில் கையொப்பம் பெற்று நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு நகல் வழங்கப்பட்டுள்ளது.

திரு.வி.கணபதி பாலசுப்பிரமணியன், நகராட்சி ஆணையர் திரு.வி.அயூப்கனுக்கு எதிராக சிலரை தூண்டிவிட்டு தகராறு செய்ததால் அவர் மீது காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து நகர் மன்ற ஒப்புதலுடன் அவரை கருப்புப் பட்டியலில் சேர்த்து நகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது……." என திருநெல்வேலி மண்டல, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கைகளின் நகல்கள் மனுதாரருக்கு, இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மு.ம.எண்:0289/2015/ந நாள்:06.03.2017 உடன் அனுப்பிவைக்கப்பட்டதுடன் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள்/ஆணைகளும் வழங்கப்பட்டன:-

"தங்களது 25.05.2016 நாளிட்ட கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் செய்ததால் உங்களை ஒப்பந்ததாரர் பட்டியலிலிருந்து இரத்து செய்து கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது குறித்து நதராட்சியின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. நகராட்சி ஆணையரது செயல் முறைகள் ந.க.எண்.4284/2015/இ1 நாள்:30.09.2015 ன்படி நகராட்சி ஒப்பந்ததாரர்கள் இருவர் மீது (திரு.K.A.செய்யது அக்பர் மற்றும் திரு.வி.கணபதி பாலசுப்பிரமணியன்) கருப்புப் பட்டியலில் கொண்டுவர நகர் மன்ற தீர்மானத்தின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. தங்களது 28.10.2015 நாளிட்ட முறையீட்டு மனு (02.11.2015ல் இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது) மேற்படி நடவடிக்கைகளுக்கப் பின்னரே அனுப்பப்பட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றுள்ளது புலனாகிறது.

இருப்பினும், மேற்குறிப்பிட்ட அறிக்கைகள் தொடர்பாக தாங்கள் கூறிக்கொள்ள விரும்பும் கூடுதல் விளக்கங்கள்/விவரங்கள் ஏதுமிருப்பின் இரண்டு வாரங்களுக்குள் அனுப்பிவைத்திடலாமெனத் தெரிவித்து அவ்வாறு ஆணையிடப்படுகிறது.......” என இவ்வலுவலக மு.ம.எண்.0289/2015/ந நாள் 06.03.2017 தேதியிட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு மற்றும் வழங்கப்பட்ட கூடுதல் வாய்ப்புகளுக்குப்பின் நாளது வரையிலும் முறையீட்டு மனுதாரர் கூடுதல் விளக்கங்கள்/விவரங்கள் ஏதும் தெரிவிக்காத நிலையில், கூறிக்கொள்ள விளக்கங்கள் ஏதுமில்லை எனக் கருதியும் உரிய விசாரணை நடத்தப்பட்டு விவரங்கள் அவருக்கு அளிக்கப்பட்டதையும் கருத்தில் கொண்டு மேல் நடவடிக்கையை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 1/6/5/17

16-5-17

16-5-17

பெறுநர்

1. திரு.வி.கணபதி பால சுப்பிரமணியன்,
3,கிழக்கு குளக்கரைத் தெரு,
மேலகடையநல்லூர்,
கடையநல்லூர்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 751.

2.நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 751.

3.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
ராம்பாப்புலர் சாலை,
மணக்காவலம் பிள்ளை நகர்,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி -2.

<u>நகல்</u>
நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை -5.